(4) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) பேரவைத் துணைத் தலைவர் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கும்போது அவர் அவையில் தலைமை வகிக்கலாமா என்பது குறித்து

திரு. துரைமுருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். துணைச் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லை என்று தீர்மானம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கு அவை ஒப்புதல் அளித்த பிறகு, அவர் அவை நடவடிக்கைகளை நடத்தலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் விதி முறையைப் படித்து விட்டுப் பேசுவது நல்லது. பேரவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப் பட்டுத்தான் இருக்கிறதே தவிர நிறைவேற்றப்படவில்லை. வழக்கறிஞர் விதி முறையைப் படித்து விட்டுப் பேசவேண்டும். திரு. பாலையா . . . .

திரு. எ. பாலையா: அடுத்ததாக என்னுடைய மாவட்டத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம். . . .

திரு. நா. வீராசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். துணைச் சபாநாயகர் அவர்களை இங்கே உட்காரக் கூடாது என்று சொன்னதாக இந்த மன்றத்தில் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி ஏதாவது உங்களிடத்தில் சொல்லப் பட்டதா?

THIRU DURAI MURUGAN: It is a moral binding.

MR. DEPUTY SPEAKER: I would request the hon. Member, Mr. Durai Murugan, to explain what does he mean by 'moral binding'.

THIRU V. KRISHNAMOORTHI: It can be ignored, Sir.

திரு. துரைமுருகன்: துணைச் சபாநாயகர் மீது இந்த அவையில் இருக்கும் பெரும்பான்மையான உறுப்பினர்கள் நம்பிக்கையில்லை என்று சொன்னதற்குப் பின்னால், அத்தகைய நம்பிக்கை

இருக்கிறது என்று காட்டிய பிறகு தான் துணை சபாநாயகர் வந்து உட்கார வேண்டும். அது தான் 'மாரல் பைன்டிங்'. ஆனால் எத்தனை பேர் என்ன சொன்னாலும் நான் உட்காருகிறேன் என்று சொன்னால் அது 'மாரல் பைன்டிங்'-காக இருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நண்பர் அளித்த விளக்கத்திற்கு நன்றி. பெரும்பாலான உறுப்பினர்கள் இருந்தால் இன்றைக்கே அதை நிறைவேற்றியிருக்கலாம். 'மாரல் பைன்டிங்'-கை விட இந்தப் பேரவையின் விதிமுறைகளை நன்கு கடைபிடிக்க அறிந்து கொள்ள வேண்டும். இந்த நாற்காலியில் ஒரு புழு, பூச்சி உட்கார்ந்தால் கூட அதற்கு மதிப்பு மரியாதை அளிக்க வேண்டும். இந்த நாற்காலியில் உட்கார்ந்திருப்பவருக்கு மதிப்பு, மரியாதையை ஆளும் கட்சியில் இருக்கும் நீங்களே தராவிட்டால், எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எப்படித் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறீர்கள்.

திரு. நா. வீராசாமி: துணைத் தலைவரவர்களே, நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினேன். துணை சபாநாயகர் அவர்களை இங்கே உட்காரக் கூடாது என்று சொன்னதாக டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு குற்றச்சாட்டை இந்த அரசாங்கத்தின் மீது சாட்டியிருக்கிறார்கள். சபாநாயகரோ, அல்லது வேறு யாராவது அமைச்சர்களோ உங்களிடத்தில் அப்படிக் கட்டளை யிட்டு இருக்கிறார்களா, அல்லது கேட்டுக்கொண்டிருக்கிறார்களா என்பதை தயவுசெய்து தெளிவு செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் இங்கே உட்கார்ந்து இருப்பதிலிருந்தே அப்படி யாரும் கட்டளையிடவில்லை என்பது சொல்லாமலே தெரியும். டாக்டர் ஹாண்டே அப்படி தெரிவித்து இருந்தால் நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

DR. H. V. HANDE: Sir, on a point of personal explanation . . .

THIRU V. KRISHNAMOORTHI: He is making baseless allegations in this House, Sir.

1974 மார்ச் 6]

திரு. நா. வீராசாமி : தயவுசெய்து ரிகார்ட்டை எடுத்துப் பாருங்கள்.

MR. DEPUTY SPEAKER : Dr. Hande, let us not waste time. Let us proceed.

திரு. ஏ. பாலையா : தலைவரவர்களே . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் சொன்னது என்னவென்றால், துணை சபாநாயகர், சபாநாயகர் இல்லாத நேரத்தில் அவையை நடத்த வேண்டுமென்று இருக்கிறது. அவர் அவைக்கு வந்து இருக்கிறார்கள். ஆகவே, அவர் அவையை நடத்த அனுமதி கேட்டார்களா, அது மறுக்கப்பட்டதா என்று கேட்டேன். இப்போது நீங்கள் விளக்கம் சொல்லிவிட்டீர்கள், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(5) 1974-75-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஏ. பாலையா : தலைவரவர்களே, என்னுடைய பேச்சிலே பல்வேறு குறுக்கீடுகள். நான் நிதிநிலை அறிக்கை மீது பேசிக் கொண்டிருக்கிறேன். அதற்குச் சம்பந்தமில்லாத விஷயங்களைப் பேசி என்னுடைய பேச்சுக்கு இடையூறாக உறுப்பினர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். கனம் துணை சபாநாயகர் அவர்கள் இதற்கு சரியான தீர்ப்பு வழங்கவேண்டும், என்னுடைய பேச்சுக்கு இடையூறு வாராமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : முதலிலிருந்து ஆரம் பித்துப் பேசுங்கள்.

திரு. ஏ. பாலையா : தலைவரவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் புதிதாக கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த கட்டபொம்மன் கழகத்துக்கு தேவையான ஸ்பேர் பார்ட்ஸ், டயர் இல்லாமல், ஏராளமான பஸ்கள் ஓடாமல் நிற்கின்றன. இந்த அரசாங்கம் டயர், ஸ்பேர்